# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 02.09.2021 supeedsam.com supeedsam@gmail.com







# எந்த நேரத்திலும் தென்னாபிரிக்கா கோரோனா இலங்கைக்குள் நுழையலாம்



(சுபீட்சம் கொழும்பு நிருபர்)

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய கொரோனா மாறுபாடு எந்த நேரத்திலும் இலங்கைக்குள் நுழையலாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவ்வாறு வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்க உலகில் வேறு எந்தப் பொறிமுறையும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இந்த விடயம் குறித்து ஊடகங்களிடம் தெரிவித்துள்ள அவர், சோதனைக்காக எடுக்கப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...

# தென்னாபிரிக்க வைரஸ் இலங்கையில் பரவினால் மரணங்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரிக்கும்

## வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

(காந்தன்)

தென்னாபிரிக்க வைரஸ் இலங்கையில் பரவும் நிலை ஏற்பட்டால் மரணங்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரிக்கும் அபாய நிலை உள்ளதாகவும் சுகாதார, வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் வேகமாக பரவிவரும் டெல்டா வைரஸின் தாக்கத்தினால் கடந்த மாதத்தில் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# வீடுகளில் 7 நாட்களில் 194 பேர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு வீடுகளில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஆகஸ்ட் 21 முதல் 2% வரையான ஏழு நாட்களில் மட்டும் 194 பேர் வீடுகளில் உயிரிழந்த நிலையில், அவர்களுக்கு கொரேனா தொற்று உறுதியானமை தொற்று நோயியல் பிரிவு தரவுகளின்படி தெரிய வந்துள்ளது.

இவ்வாறு வீடுகளில் இறந்தவர்களில் 99 பெண்களும் 95 ஆண்களும் அடங்குகின்றனர்.இவற்றுடன்,

02 ஆம் பக்கத்தில்...

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விடுத்துள்ள முக்கிய அறிவிப்பு

(ஊர்காவலன்)

வடக்கு கிழக்கில் கோவிட் தொற்றுக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கையும், கோவிட் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றதாக இலங்கை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ்

02 ஆம் பக்கத்தில்...

# தடுப்பூசிகளுக்கே சவால் விடும் 'மு'


## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொலம்பியாவில் ஜனவரி மாதம் முதல் அடையாளம் காணப்பட்ட 'மு' எனப்படும் கொரோனா வைரஸ் வகை தடுப்பூசிகளின் செயல்திறனுக்கு எதிராக செயற்படும் அபாயத்தை கொண்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

உலகில் தீவிர தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கொவிட் வைரஸ் வகைகளின் 5 ஆவதாக அறியப்படும் இந்த வைரஸுக்கு

02 ஆம் பக்கத்தில்...

# மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக பல கோடி ரூபாய் செலவில் கோவிட் நோயாளிகளுக்கான நவீன அதி தீவிர சிகிச்சைப் பிரிவு





(ரக்ஸனா, கமல்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக பல கோடி ரூபாய் செலவில் கொவிட் நோயாளிகளுக்கான நவீன அதி தீவிர சிகிச்சைப் பிரிவானது களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில்

02 ஆம் பக்கத்தில்...

# ஆகஸ்டில் ரணகளமாகிய கிழக்கு தோற்றாளர்கள் மரணங்கள் 4 மடங்காக அதிகரிப்பு

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் வழமைக்கு மாறாக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் தொற்றுகளும் மரணங்களும் நான்கு மடங்காக அதிகரித்துக் காணப்பட்டன.நேற்றுவரை 41,856 தொற்றுக்களும் 695 மரணங்களும் நிகழ்ந்துள்ளன.தற்போது வழங்கப்படும் தடுப்பூசியின் பின்னர் இத்தொகை குறைய வாய்ப்புண்டு என்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர்



02 ஆம் பக்கத்தில்...

# திருகோணமலை மாவட்டத்தில் 147 சிறுவர்களும் 148 கர்ப்பிணித்தாய்மார்களும் கோரோனா தோற்றினால் பாதிப்பு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்டத்தில் 147 சிறுவர்களும் 148 கர்ப்பிணித் தாய்மார்களும் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் (31)

02 ஆம் பக்கத்தில்...

# காணாமல்போனவர்களுக்கு இழப்பீட்டை வழங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவிப்பு

இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் பாதுகாப்புத் தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டும், கடத்தப்பட்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது எனக் கேட்டு பல வருடங்களாக தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், காணாமல்போனவர்களுக்கு இழப்பீட்டை

02 ஆம் பக்கத்தில்...






# வெளிவிவகார அமைச்சரை சந்திப்பதனை நிராகரித்த கர்தினால்

(ஊர்காவலன்)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை சந்திப்பதனை நிராகரிப்பதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தமது நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் வரையில் வெளிவிவகார அமைச்சரை சந்திக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் சத்திய சீலராசா கோரோனா தோற்றினால் காலமானார்



(அ. அச்சுதன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் மத்திய குழு உறுப்பினரும், திருகோணமலை நகரசபை முன்னாள் உறுப்பினருமான கோணாமலை சத்தியசீலராசா கொரோனா தொற்றினால் காலமானார்.

02 ஆம் பக்கத்தில்...

# வரிசையில் காத்திருந்த மக்களுக்கு 1 கிலோ சீனி வழங்கும் சதோச நிறுவனம்





(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)

நாட்டில் சீனிக்கு தட்டுப்பாடு இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில் நேற்று முதல் லங்கா சதோச நிறுவனத்தின் ஊடாக 1டுஞ் சீனி 130 ரூபாய்க்கு கொள்வனவு செய்ய முடியும் என வார்த்தை அமைச்சு அறிவித்திருந்தது.

02 ஆம் பக்கத்தில்...







## கொரோனா விழிப்புணர்வு பதாதை சாய்ந்தமருது,மாளிகைக்காடு ஜும் ஆப் பள்ளிவாசலினால் திறந்து வைப்பு

(பாறுக் ஷிஹான்)

கொரோனா பெரும் தொற்று தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பதாகைகள் இராணுவத்தின் ஒருங்கமைப்புடன் காட்சிப்படுத்தும் செயற்திட்டம் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலினால் நேற்று புதன்கிழமை மாலை முன்னெடுக்கப்பட்டது.

சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபதுல் கரீமின் தலைமையில் ஜும்ஆ பள்ளிவாசல் முன்பாக குறித்த செயற்திட்டத்தின் முதல் கொரோனா விழிப்பூட்டல் பதாகை நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

நாட்டில் தற்போது பரவலாக அச்சுறுத்தலை ஏற்படுத்தி இருக்கும் கோவிட் 19 பெரும் தொற்று குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் குறித்த பதாகைகள் பல இடங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வடக்கு, கிழக்கு மக்களுக்கு பொலிஸ் ஊடகப்

அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கோவிட் வைரஸ் பெருந்தொற்றின் நோய்க்காவிகள் பொதுமக்களே, எனவே பொதுமக்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மதிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களே ஏதேனும் அத்தியாவசிய தேவைகள் இருந்தால் மட்டும் வீடுகளிலிருந்து வெளியேறுங்கள்.

இதன்போது வீதிச்சோதனைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு நீங்கள் பயணிப்பதற்கான காரணத்தைக் கூற வேண்டியது அவசியம். போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி பயணிப்பவர்களும் உள்ளனர். இவ்வாறானவர்களை இனங்காண்பதற்காகப் பொலிஸார் பல கேள்விகளைக் கேட்பர்.

எனவே, அற்கான ஒத்துழைப்பைப் பொலிஸாருக்கு வழங்கிச் செயற்படுமாறு வடக்கு, கிழக்கு மக்களைக் கோருகின்றேன் என தெரிவித்துள்ளார்.

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த

அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் ,உற்றார் ,உறவினர் மற்றும் நண்பர்களுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையானது தனது இரங்கலையும் துயர்பகிர்வினையும் தெரிவித்துக் கொள்கின்றது .

## வரிசையில் காத்திருந்த மக்களுக்கு

இருப்பினும் திருகோணமலையில் சீனி கொள்வனவிற்காக லங்கா சதோச நிறுவனத்தில் மக்கள் வரிசையில் காத்திருந்து சீனி கொள்வனவு செய்தாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் அமைந்துள்ள லங்கா சதோச நிறுவனத்தில் சீனி கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது

மேலும் அரசாங்கத்தினால் சீனிக்கு தட்டுப்பாடு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் நேற்றைய தினம் முதல் லங்கா சதோச நிறுவனத்தினூடாக ரூபா 130 க்கு சிவப்பு சீனி கொள்வனவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் இவ்வாறு நீண்ட நேரம் நீண்ட வரிசையில் நின்று காத்திருந்து ஒருவருக்கு 1டுஞ் சீனி மாத்திரமே வழங்கப்படுவதாகவும் வழங்கப்படும் சீனி இரு நாட்களுக்கும் போதாமல் இருப்பதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

நாட்டில் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் வரிசையில் நின்று ஒருவருக்கு 1kg சீனி மாத்திரம் வழங்குவது மக்களை பெரும் அசௌகரியங்களுக்குள்ளாக்குவதாக வாடிக்கையாளர் தெரிவிக்கின்றனர்.

## காணாமல்போனவர்களுக்கு இழப்பீட்டை வழங்கவுள்ளதாக

வழங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒருவர் எத்தகைய சூழலில் காணாமல்போனார் என்பதை பார்க்காது, காணாமற்போனோரை அடையாளம் கண்டு இழப்பீட்டை வழங்கவுள்ளதாக நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

காணாமல் போனவர்களுக்கான சர்வதேச தினமான நேற்று முன்தினம் இரவு கொழும்பில் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில், நீதி அமைச்சர் அலி சப்ரி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல்போனவர்கள் தொடர்பான விடயத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி உறுதியாக இருப்பதாகவும்,இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி வருவதாக அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தை போலல்லாது காணாமல்போனோர் அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் தொடர்பான அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் தொடர்பாக அரசாங்கம் கண்காணித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற்போனவர்கள் எந்த காரணத்திற்காக காணாமல்போனார்கள் என்பதை பற்றி விசாரிக்கத் தேவையில்லையென ஸ்ரீலங்கா ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா பிரஜை என்பதை மனதில் வைத்து, இவ்வாறான சம்பவம் மீண்டும் நிகழாமலிருப்பதை உறுத்திப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி கூறியுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் கடந்த போதிலும் இன்னும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமல் இருப்பது, நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணமென நீதியமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிவிவகார அமைச்சரை சந்திப்பதனை

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கடிதம் ஊடாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்திப்பதற்காக கோரிக்கை விடுத்துள்ளார்.

நீர்கொழும்பு புனித மரியாள் தேவாலயத்தின் அருட் தந்தை காமினி பெர்னாண்டோ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

சில நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும் வரையில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸை சந்திக்க தாம் தயாரில்லை என கர்தினால் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க கூடிய வகையில் சரியான விசாரணைகள் நடாத்தப்பட வேண்டுமென கர்தினால் கடிதம் மூலம் அரசாங்கத்திடம் கோரியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் அமுல்படுத்தினாலேயே கத்தோலிக்க சமூகமும் பொதுமக்களும் அரசாங்கத்தை நம்புவார்கள் என அவர் தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அண்மைய நாட்களில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட தகவல்கள் நம்பிக்கைக்குரியவை அல்ல என அருட்தந்தை பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## ஆகஸ்டில் ரணகளமாகிய கிழக்கு தொற்றாளர்கள் மரணங்கள்

ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

இறுதியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 245பேரும், அம்பாறைப்பிராந்தியத்தில் 213பேரும், தொற்றுக்குள்ளாகியிருந்தனர். மட்டக்களப்பில் 7பேரும், அம்பாறையில் 4பேரும் மரணித்துள்ளனர்.

கிழக்கில் அதிஆபத்துநிறைந்த பகுதிகளாக களுவாஞ்சிக்குடி(66) , உஹன(53) ,அம்பாறை(58) மட்டக்களப்பு(45) ,தெஹியத்தகண்டிய (28) ஆகிய பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் 580பேர் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள்.5மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

தடுப்பூசிகள்!

கிழக்கில் முதலாவது தடுப்பூசிகள் வழங்க 909520 கிடைத்தன. அதில் 833500 ஏற்றப்பட்டன. அதாவது 84வீதமானவர்களுக்கு ஏற்றப்பட்டன. அதில் கூடுதலாக கல்முனை மட்டக்களப்பு சுகாதாரப்பிரிவுகளில் 94வீதமானவர்களுக்கும் ,திருமலையில் 81வீதமானவர்களுக்கும், அம்பாறையில் 60வீதமானவர்களுக்கும் முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டன.

இரண்டாவது தடுப்பூசிகள் வழங்க 639600 கிடைத்தன. அதில் நேற்று வரை 4%வீதமானவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன. அடுத்த வாரமளவில் இரண்டாம் கட்ட இரண்டாவது தடுப்பூசிகள் ஏற்றப்படும்.

**695பேர் மரணம்!**

கிழக்கில் இதுவரை 695கொவிட் மரணங்கள் ஏற்பட்டுள்ளன. இறுதியாக நேற்று 12மரணங்கள் சம்பவித்திருக்கின்றன.

மட்டக்களப்பு 07 கல்முனை 01 அம்பாறை 04 என 12மரணங்களும் பதிவாகியுள்ளது.

மொத்தமாக மூன்றாம் அலையின் பின் 38880 கோவிட் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளார்கள். 671 மரணங்களும் மொத்தமாக 695கோவிட் மரணங்கள் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலையில் அதிக 240 மரணங்களும் , மட்டக்களப்பு மாவட்டத்தில் 230பேரும் , கல்முனையில் 87 ,அம்பாறையில் 41 எனவும் மரணங்கள்சம்பவித்துள்ளன.

இதனை கருத்திற் கொண்டு மக்கள் அவதானத்துடன் சுகாதார வழி முறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கவும் இசமூக இடைவெளிகளை பேணுதல் முகக்கவசம் அணிதல் இகைகளை அடிக்கடி சவர்க்காரம் இட்டு கழுவுதல் போன்ற விடயங்களை அரசின் கட்டுப்பாடுகளுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும்.

தடுப்பூசியைப் பெற்றுவிட்டோம் என்ற நினைப்பில் சுகாதாரநடைமுறைகளில் ஒருவித தளர்வை கடைப்பிடிப்பதாகவே பார்க்கிறோம். எனவே தயவுசெய்து அனைவரும் தொடர்ச்சியாக சுகாதாரநடைமுறைகளை இறுக்கமாகக்கடைப்பிடிக்க வேண்டும். என்றார்.

## திருகோணமலை மாவட்டத்தில் 147

வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட நாளாந்த உத்தியோகபூர்வ அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் ஏழு மரணங்கள் சம்பவித்துள்ளது.

அத்துடன் 235 பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 131 ஆண்களும், 104 பெண்களும் அடங்குகின்றனர்.

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரைக்கும் 4631 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 99 பேர் மரணித்துள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் தெரிவித்துள்ளது.

இதுவரைக்கும் 9815 பேர் தொற்றுக்கு உள்ளாகி உள்ளதாகவும் ஒரு வயது தொடக்கம் ஐந்து வயது வரை 147 சிறுவர்களும், 65 வயதுக்கு மேற்பட்ட 375 பேர் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 148 கர்ப்பிணித் தாய்மார்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இன்று வரைக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 248 மரணம் சம்பவித்துள்ளதாகவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன் முதலாக பல கோடி ரூபாய்

திறந்துவைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் புவனேந்திர நாதன் அவர்கள் தெரிவித்தார்.

ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தும் வைத்திய அத்தியட்சகர் தலைமையில் இன்று நடைபெற்றது. இதன் போது பொது வைத்திய நிபுணர்கள்,மயக்க மருந்து வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள்,தாதிய உத்தியோகத்தர்கள் என பலரும் ஆர்வத்துடன் ஈடுபட்டதனை அவதானிக்ககூடியாதாக இருந்தது.

மேற்படி தீவிர சிகிச்சை பிரிவானது கொரணா நோயினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நோயாளிகளை வைத்து அதிதீவிர சிகிச்சையளிக்கும் பிரிவாக இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

ஒரேதடவையில் 6 நோயாளிகளை வைத்து சிகிச்சையளிக்கக் கூடியவிதத்தில் இச் சிகிச்சை பிரிவு அமையப்பெற்றுள்ளதுடன் நோயாளிக்கு அண்மையில் இருந்து சிகிச்சை வழங்குவதற்கான வைத்திய துறையில் அதிநவீன முறைகளில் ஒன்றான வைரஸ் கிருமிகளுக்கு எதிர்மறை அழுத்தம் கொடுக்கக் கூடிய (negative pressure room ) இந்த சிகிச்சை கூடம் அமையப் பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும். குறித்த சிகிச்சை பிரிவை அமைப்பதற்கு பல கோடி ரூபாய்க்கள் செலவு செய்யப்பட்டுள்ளதுடன். இவ்வாறான சிகிச்சை கூடங்கள் இலங்கையில் ஒரு சில மாவட்டங்களிலையே ஒரு சில மாவட்டங்களிலையே அமையப்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்ட சிகிச்சை பிரிவானது 01.09.2021 திகதி தொடங்கம் உத்திய பூர்வமாக இயங்கும் என்பதுடன் எமது பிரதேச மக்களுக்கு இதுவொரு வரப்பிரசாதமாக அமைய உள்ளதாக எனவும் வைத்திய அத்தியட்சகர் இதன்போது மேலும் தெரிவித்தார.

## வீடுகளில் 7 நாட்களில் 194 பேர் உயிரிழப்பு

இதுவரை வீடுகளில் இறந்தவர்களில் மொத்த எண்ணிக்கை 1,094 ஆக பதிவாகியுள்ளது.

மொத்த கோவிட் இறப்புகளில் 13.1 வீதம் வீடுகளிலேயே நிகழ்ந்ததாக தொற்றுநோயியல் பிரிவு சுட்டிக்காட்டுகிறது.

இதனைவிட மருத்துவமனைக்கு செல்லும் வழியில் 66 பேர் கொரோனா காரணமாக இறந்தனர்.

தொற்றுநோயியல் பிரிவின் தரவின்படி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடன் 493 கோவிட் இறப்புகள் நிகழ்ந்துள்ளன. இது மொத்த இறப்புகளில் 5.9 வீதமாகும் ஆகும்.

கொவிட் 19 தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களில் கிட்டத்தட்ட 20 வீதம் பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பே இறந்துள்ளதாகவும் தொற்றுநோயியல் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

## தடுப்பூசிகளுக்கே சவால் விடும் 'மு'; உலக சுகாதார ஸ்தாபனம்

அறிவியல் பூர்வமாக ஆ .1.621 என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் வகையை கண்காணிப்பதாகவும் இதை நன்கு புரிந்து கொள்ள மேலதிக ஆய்வுகள் தேவை என்று உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியது.

'மு' மாறுபாடு நோயெதிர்ப்பு திறனிலிருந்து தப்பிப்பதற்கு சாத்தியமான பண்புகளை அதிமாக கொண்டுள்ளது என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தகவல் படி, தற்போது அடையாளம் கண்டுள்ள நான்கு கொவிட் 19 வகைகளில் 193 நாடுகளில் ஆல்பா வகையும் மற்றும் 170 நாடுகளில் டெல்டா வகையும் தீவிரமடைந்துள்ளன.

கொலம்பியாவில் கண்டறியப்பட்ட பிறகு, இந்த வைரஸ் மாறுபாடு தென் அமெரிக்க நாடுகளிலும் ஐரோப்பாவிலும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வைரஸின் உலகளாவிய பரவலானது 0.1 விகிதத்திற்கும் குறைவாக உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும், கொலம்பியாவில் இதன் பரவல் 39 வீதமாக பதிவாகியுள்ளது.புதிய வைரஸ் வகைகள் தோன்றுவதில் பரவலான கவலை உள்ளது.ஏனெனில் தொற்று விகிதங்கள் உலகளவில் மீண்டும் அதிகரித்து வருகின்றன.

மிகவும் பரவும் டெல்டா மாறுபாடுகுறிப்பாக தடுப்பூசி போடாதவர்களிடையேயும் வைரஸ் பரவலுக்கான எதிர்ப்பு நடவடிக்கைகள் தளர்த்தப்பட்ட பகுதிகளிலும் அதிகரித்துள்ளது.கொவிட் 19 உட்பட அனைத்து வைரஸ்களும் காலப்போக்கில் மாறுகின்றன. இவற்றில் சில வைரஸின் பண்புகளை சிறிதளவு கொண்டிருக்கும் அல்லது எந்த விளைவையும் ஏற்படுத்தாது.

ஆனால் சில மாறுபாடுகள் வைரஸின் பண்புகளை பாதிப்பதோடு, பரவல் அடையும் திறனும் நோயின் தீவிரம் மற்றும் தடுப்பூசிகள், மருந்துகள் மற்றும் பிற எதிர் நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்படும் திறனையும் அதிகமாக கொண்டுள்ளது.

இது போன்ற வைரஸ் மாறுபாடுகளுக்கு எதிராக தொடர்ந்து செயற்பட வேண்டிய நிலையை உலகம் எதிர் கொண்டுள்ளது.




## தென்னாபிரிக்க வைரஸ் இலங்கையில் பரவினால்

இந்நிலையில் இதுவரை நாட்டின் கோவிட் தாக்கங்கள் மற்றும் எதிர்கால சவால்கள் குறித்து ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர கூறுகையில், சி.1.2 என்ற தென்னாபிரிக்க வைரஸ் மற்றும் 'மூ' கொலம்பிய வைரஸ் ஆகியவை தற்போது பாவனையில் உள்ள தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாதவை என கூறப்படுகின்றது.

எனவே இலங்கையில் இந்த வைரஸ்களில் ஏதேனும் ஒன்றேனும் பரவினால் தற்போது பதிவாகும். கோவிட் மரணங்களை விட மூன்று மடங்கு மரணங்கள் நாட்டில் ஏற்படும் அபாயநிலை எம்மெதிரே உள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

சமூக மருத்துவத்துறை நிபுணர் பேராசிரியர் சுனெத் அகம்பொடி இது குறித்து கூறுகையில், நாம் புதிய வைரஸ் தொற்றுக்குள் சிக்கிக்கொண்டால், புதிய வைரஸ் பரவலுக்கு இடமளித்தால் கோவிட் மரணங்களால் எண்ணிக்கை இந்த ஆண்டுக்குள் 30 ஆயிரத்தை அண்மிக்கலாம். எனவே இந்த அச்சுறுத்தல் நிலைமையை கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றார்.

இது குறித்து இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன கூறுகையில்,

கடந்த ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி நாட்டின் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 4,508 ஆககாணப்பட்டது. செப்டெம்பர் 1 ஆம் திகதி இந்த எண்ணிக்கை ஒன்பதாயிரத்தை கடந்துள்ளது.

அப்படியென்றால் இந்த ஒரு மாதத்தில் 50 வீதத்தால் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது நாட்டின் மிகப்பெரிய அச்சுறுத்தல் நிலைமையை வெளிப்படுத்துகின்றது.

இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்த மாதத்தில் மரண எண்ணிக்கை நூறுக்கு முன்னூறு என்ற ரீதியில் அதிகரிக்கும். இது நாட்டின் சுகாதார கட்டமைப்பை மட்டுமல்லாது பொருளாதாரத்தையும் வெகுவாக பாதிக்கும் என குறிப்பிட்டுள்ளார்.

## எந்த நேரத்திலும் தென்னாபிரிக்கா கொரோனா இலங்கைக்குள்

மாதிரி மூலம் கண்டறியப்பட்டால் மட்டுமே நாட்டில் ஒரு புதிய மாறுபாடு அடையாளம் காண முடியும் என தெரிவித்தார்.

எந்தவொரு கொரோனா மாறுபாடும் இலங்கைக்குள் நுழையலாம் என்றும் அதைத் தடுக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

பிரச்சினை என்னவென்றால், குறிப்பிட்ட மாறுபாடு நாட்டில் பரவிய பிறகு ஒரு மாதிரி மூலம் கண்டறியப்பட்டால் மட்டுமே இலங்கைக்குள் அந்த மாறுபாடு நுழைந்துள்ளது என்பதை நாம் அறிய முடியும் என தெரிவித்தார். ஏனெனில், நாம் முன்கூட்டியே அறிந்து கொண்டு அந்த மாறுபாடு ஒரு நாட்டிற்குள் நுழைவதை நிறுத்தவும் முடியாது என்றும் அவர் கூறினார்.

சீ 12 என்ற குறித்த கொரோனா வைரஸ் திரிபு தென்னாபிரிக்காவில் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நள்ளிரவில் கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானைகள் மக்கள் அல்லோலகல்லோலம்; பயிர்கள் தாக்கி அழிப்பு

(ரக்ஸனா)



மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் எல்லைப்புறக் கிராமமான கண்ணபுரம் கிழக்கு கிராமத்தில் புதன்கிழமை(01) அதிகாலை 2 மணியளவில் புகுந்த 2 காட்டு யானைகளால் மக்கிராம மக்கள் மிகுந்த அல்லோல கல்லோலப்படதாகவும், யானைகள் கிராமத்தில் மக்கள் செய்கை பண்ணப்பட்டிருந்த மரவெள்ளி, தென்னை, மா, பலா போன்ற பயிர்களையும் அழித்துத் துவம்சம் செய்துவிட்டுச் சென்றுள்ளதாக அக்கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்கிழமை(31) இரவு 8 மணியளவில் அக்கிராமத்திற்குள் புகுந்த 2 காட்டுயானைகள் அங்கிருந்து பயிர்களை துவம்சம் செய்து வேளை மக்கள் ஒன்றுகூடி தீப்பந்தம் ஏந்தியும், பட்டாசு கொழுத்தியும், உரத்த குரலில் சத்தமிட்டும், விரட்டியுள்ளனர். பின்னர் இரவு 11 மணியளவில்தான் கிராமத்தை விட்டு துரத்தியுள்ளனர்.

பின்னர் புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் மீண்டும் அக்கிராமத்திற்குள் புகுந்த அதே காட்டுயானைகள் அங்கு மக்கள் அவர்களது வாழ்வாதாரத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மரவெள்ளி தென்னை, மா, மற்றும் பலா போன்ற பயிர்களை முற்றாக அழித்து துவம்சம் செய்துவிட்டு அதிகாலை 5 மணியளவிலதான்; கிராமத்தை விட்டு நகர்ந்ததாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக தமது கிராமத்தில் தொடர்ந்து காட்டுயானைகளின் தொல்லைகளும், அட்டகாசங்களும், அழிவுகளும், இடம்பெற்று வருவதாகவும், இது தொடர்பில் தாம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றாலும், அதுபற்றி இன்னும் தமக்குரிய தீர்க்கமான தீர்வு கிடைக்கவில்லை எனவும் அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். தொடர்ந்து காட்டு யானைகளின் தொல்லையிலிருந்து பாதுகாப்பதற்கு யானைப் பாதுகாப்பு வேலி அமைத்துத் தரவேண்டும் என அங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் மிக நீண்டகாலமாகவிருந்து காட்டுயானைகளின் அட்காசங்களும், தொல்லைகளும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனைக்கு 1 லட்சம் சினோபாம் கிடைத்தன அடுத்தவாரம் இரண்டாம் கட்டம் ஆரம்பம்

( வி.ரி.சகாதேவராஜா )



எமது கல்முனை பிராந்தியத்தில் இரண்டாவது டோஸ்ஸூக்கென இறுதியாக 1லட்சம் சினோபாம் தடுப்பூசிகள் கிடைத்தன.அவற்றை எமது 13 சுகாதாரப்பரிவுகளிலும் வழங்க 5தினங்கள் ஒதுக்கினோம். ஆனால் எண்ணி 3 தினங்களில் அதாவது நேற்றுடன்(01) நிறைவடைந்தது. 50வீதமானோருக்கு இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டிருக்கிறது.அடுத்தவாரம் இரண்டாம்கட்டம் ஆரம்பமாகும்.தடுப்பூசியே மரணத்தை வெல்லும் ஆயுதம்.

என்று கல்முனைப் பிராந்திய சுகாதாரசேவைபணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் தெரிவித்தார்.

கல்முனைப்பிராந்தியத்தில் சமகால கொவிட் நிலைமை பற்றிமேலும் கூறுகையில்:

எமக்கு முதலில் கிடைத்த தடுப்பூசிகளைக்கொண்டு முதலாவது டோஸ் இதுவரை 95வீதமானோர்களுக்கு ஏற்றியுள்ளோம்.

இதுசாதனையாகக்கருதப்பட்டது. எனினும் 60வயதுக்கு மேற்பட்ட சிலர் இன்னும் தடுப்பூசிகளைப் பெறாதகாரணத்தினால் மரணவீதம் அதிகரித்துவந்தது.

முதலாவது டோஸ் நிறைவுசெய்ய 50ஆயிரம் ஊசிகளும் இரண்டாவது டோஸ் வழங்க 2லட்சத்து 40ஆயிரம் ஊசிகள் தேவைப்பட்டன. கடந்தவாரம் கிடைத்த 20ஆயிரம் தடுப்பூசிகளைக்கொண்டு கணிசமான கர்ப்பிணித்தாய்மார்களுக்கும் 60 வயது கடந்தோருக்கும் ஏற்றியுள்ளோம்.

இறுதியாக 1லட்சம் சினோபாம் தடுப்பூசிகள் கிடைத்தன. அவற்றைக்கொண்டு

இரண்டாவது டோஸ் கடந்த திங்கட்கிழமை(30) 5நாட்களுக்கென ஆரம்பித்தபோதிலும் 3நாட்களில் அவை தீர்ந்துவிட்டது.

தடுப்பூசி தொடர்பில் தற்போது மக்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு ஆர்வம் என்பன இதனை 3நாட்களுள் ஏற்றக்கூடியதாயிருந்தது. எவ்வித தொந்தரவும் இல்லாதிருந்தது.மேலும் வயதானவர்களுக்கு இளைஞர்கள் வழிவிட்டு முன்னுரிமையளித்தமையையும் காணக்கூடியதாயிருந்தது.

எதிர்வரும் 4ஆம் திகதி நாட்டுக்கு ஒரு தொகுதி சினோபாம் ஊசிகள் வருகின்றன. ஆதலால் அடுத்தவாரமளவில் எஞ்சிய 50வீதமானோருக்கு வழங்கமுடியும்.

இதேவேளை கல்முனை பிராந்தியத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 32 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு மரணம் பதிவாகியுள்ளது. இதுவரை 145 மரணங்கள் நிகழ்துள்ளன.

எதுஎப்படியிருப்பினும், இம்மாதம் நிறைவுறும் நேரம் எமது பிராந்தியத்தில் கொவிட் மரணத்தை பூச்சியமாக்கவுள்ளோம்.

எனவேபொதுமக்கள் நிலைமையினை புரிந்துகொண்டு மிகவும் கவனமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடக்க வேண்டும் . அமுல்படுத்தப்பட்டுள்ள பொது முடக்கத்தின் அவசியத்தை உணர்ந்து நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் .

# ஊரடங்குக்கு மத்தியிலும் மட்டக்களப்பில் தபாலகங்கள் திறப்பு ஒய்வூதியம்,முதியோர் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன





( மட்டக்களப்பு நிருபர்)

தற்போது அமுலிலுள்ள தனிமைப்படுத்த ஊரடங்குச்சட்டத்திற்கு மத்தியிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் அலுவலகங்கள் நேற்று திறக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு பிரதான தபால் நிலையத்தின் கீழள்ள சகல தபால் மற்றும் உப தபால் அலுவலகங்களிலும் இன்று ஓய்வுதிய கொடுப்பனவுகள் மற்றும் முதியோர் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டதுடன் நோயாளர்களுக்கான வைத்தியசாலை கிளினிக் மருந்துப் பொருட்களும் வினியோகிக்கப்பட்டதாக பிரதம தபால் அதிபர் எஸ்.சுகுமார் தெரிவித்தார்.

இதேவேளை மாவட்டத்தின் சகலதபால் அவலகங்களும் திறக்கப்பட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

ஓய்வூதியம் பெறுவோரும் ஏனையோரும் சுகாதார நடைமுறைகளைப் பேணி தபாலகம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இரண்டாவது தடுப்பூசி 3ஆவது நாள் ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)



கல்முனை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளின் தலைமையில் இரண்டாவது கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் 3 ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கபட்டு வருகின்றது.

இதற்கமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வசீரின் தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,நுளம்புகள தடுப்பு பிரிவினர், நிந்தவூர் பிரதேச இளைஞர் தன்னார்வ அணியினர்,பாதுகாப்பு படையினர் இணைந்து இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நிகழ்வினை முன்னெடுத்துள்ளனர்.

இந்த இரண்டாம் கட்ட தடுப்பூசிகள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பொது கட்டிடங்கள், பாடசாலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன.இரண்டாவது தடுப்பூசியை பெற 30 வயதிற்கு மேற்பட்டோர் மிகுந்த ஆர்வத்துடன் மிக நீண்ட வரிசையில் காத்திருந்து தடுப்பூசியை பெற்று வருகின்றனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட திருக்கோவில், பொத்துவில், இறக்காமம், சம்மாந்துறை, நாவிதன்வெளி, கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, ஆகிய சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இந்த இரண்டாம் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை 3ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தும் வன்னி ஹோப் சேவை மன்றத்தின் முயற்சி வரவேற்கத்தக்கது

(எம்.ஏ.முகமட்)



சவால்மிகுந்த ஒரு காலகட்டத்தில் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன் டிஜிட்டல் முறையான கற்றல் செயற்பாடுகள் ஊடாக மாணவ சமூகத்தின் கல்வி நடவடிக்கைளுக்கு உதவும் வன்னி ஹோப் அவுஸ்ரேலியா மற்றும் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் முயற்சிகள் வரவேற்கத்தக்கதும் பாராட்டவேண்டிய ஒன்றாகவும் உள்ளது என கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. ஸீ. எம்.முஸ் இல் தெரிவித்தார்.

வன்னி ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மக்கள் சேவை மன்றத்தினால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூன்று பின்தங்கிய பாடசாலைகளுக்கு 15கணணித் தொகுதிகள் வழங்கி வைக்கும் வைபவம் மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம் பாரிஸ் தலைமையில் மட்கோஅல்மின்ஹாஜ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே திட்டமிடல் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொவிட் அசாதாரண சூழல் காரணமாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கொவிட் பரவல் காரணமாக பாடசாலைகள் பல தடவைகள் மூடப்பட்டன.

கற்றல் செயற்பாடுகளை நிகழ்நிலை மூலம் கற்பிப்பதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்து வந்தாலும் டிஜிட்டல் கல்வி சாதாரண வசதிகள் எல்லாப் பாடசாலைகளிலும் மாணவர்களிடமும் இல்லாதுள்ளது.

இதனால் இந்த முறை மூலம் கற்றல் செயற்பாடுகள் எதிர்பார்த இலக்கை அடைய முடியாதுள்ளது. எதிர்காலத்தில் டிஜிட்டல் கல்வி முறையுடான கற்பித்தல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவுதற்கான கல்வி மறுசீரமைப்புகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன் அவசியத்தினை உணர்ந்து வன்னி ஹோப் நிறுவனம் பின்தங்கிய பாடசாலைகளுக்கு கணனி வசதிகளை வழங்கி வருவதானது மாணவர்களின் டிஜிட்டல் முறையான கல்வி செயற்பாடுகளுக்கு பாரிய நன்மையளிக்கும். அத்தோடு கஸ்ட, அதிகஸ்ட பாடசாலைகளில் நவீன கல்வி முறை ஊடான கற்றல் வெளியீட்டுக்கு வன்னிய ஹோப் அவுஸ்ரேலியா நிறுவனத்தின் உதவிகள் பாரிய பங்களிப்பு செய்யும் என்பதிவல எவ்வித ஐயமுமில்லை.

கிராமம்புற பாடசாலைளின் உண்மை நிலைகளை அறிந்து பல்வேறு தேவைகளை நிறைவேற்றி ஏழை மாணவர்களின் கல்விக்காக அர்பணித்துவரும் வன்னி ஹோப் அவுஸ்ரேலியா மற்றும் திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினை நான் மனதார பாராட்டுகின்றேன் அவர்களின் சேவை எமது மாவட்டத்திற்கு மாத்திரமல்ல முழு நாட்டுக்கும் அவசியமானது என அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

நவீன கற்றல் செயற்பாடுகள் ஊடாக தங்களுடைய கற்றல் நடவடிக்கைகளை தங்குதடையின்றி மேற்கொள்ளுவதற்கான வன்னி ஹோப் அவுஸ்ரேலிய நிறுவனத்தின் கணனித் தொகுதிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் கிண்ணியா கல்வி வலையத்திற்குட்பட்ட ஆலேங்கேணி சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்திற்கு ஐந்து கணனித் தொகுதிகளும், திருகோணமலை கல்வி வலையத்திற்குட்பட்ட குளக்கோட்டன் தமிழ் வித்தியாலயத்திற்கு ஐந்து கணனித் தொகுதிகளும் மட்கோ அல்மின்ஹாஜ் மகா வித்தியாலயத்திற்கு ஐந்து கணனித் தொகுதிகளும் வழங்கி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# 13 கோடி 73 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்திப் பணிகள்



(எம்.ஏ.றமீஸ்)

நாட்டில்கொவிட் தொற்று அசாதாரண சூழ் நிலை நிலவி வருகின்ற போதிலும் நாட்டின்பல்வேறு பட்ட பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளும் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைவாக, நாட்டில் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் கீழ் தீகவாபி வரலாற்றுச் சிறப்பு மிக்க ரஜமகா விகாரை கிழக்கு வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின் செயற்பாட்டு உறுப்பினரும், தேசிய அரச சார்பற்ற ஒன்றியத்தின் தவிசாளருமான எஸ்.எம்.லாபீரின் முயற்சியின் பயனாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் 13 கோடி %3 இலட்சம் ரூபா விஷேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

சுமார் 5.6 கிலோமீற்றர் வீதி இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இவ்வீதி அபிவிருத்திப் பணிகளை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம்(31) இடம்பெற்றது.

தீகவாபி ரஜமகா விகாரையின் விகாராதிபதி மகாஓய சோபித தேரரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது பொதுஜன பெரமுன கட்சியின் செயற்பாட்டு உறுப்பினரும், தேசிய அரச சார்பற்ற ஒன்றியத்தின் தவிசாளருமான எஸ்.எம்.லாபீர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அக்கரைப்பற்று காரியாலய நிறைவேற்று பொறியியலாளர் எம்.ஐ.ஏ.சஜீர், பொறியியலாளர் ஏ.எச்.எம்.சபீக் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உணவுப் பொருள்கள் விநியோகம்

வடமராட்சி

சந்நிதியான் ஆச்சிரமத்தால் புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராமத்துக்கு அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டது.

கொவிட் 19 இடர் கால நிவாரண உதவித் திட்டத்திற்கு அமைவாக தெல்லிப்பளை பிரதேச செயலாளர் நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு ஒ/ 208 இல் உள்ள இராவணா சனசமூக நிலையம் கிராமத்தில் உள்ள 47 குடும்பங்களுக்கு 3000 உரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டது.

வணக்கத்திற்குரிய மோகனதாஸ் சுவாமிகள் அவர்களின் தலைமையில் இவ் உதவித்திட்டம் இடம்பெற்றது மற்றுமஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர்





# SRI JEWELLERY

Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

# Sikaram

துரிதபணமாற்றுச்சேவை

Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
sikaramgmbh@gmail.com / www.sikaram.com
Tel : 044 2410241
Fax : 044 2410245

# Prasath Coiffeur

Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00

Heinrichstrasse 120, 8005 Zürich. NAT:076 565 64 57

# SwissLife Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598

Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

# Allegrotto Pizza Kurier

Allegrotto Pizza Kurier
Bederstrasse 102, 8002 Zürich.
044 280 40 30 | 076 326 91 18
Toll free 0844 80 40 30
pizzakingzurich@gmail.com.
www.allegrotto.ch

# Seela Food Gastro AG

044 222 22 50
076 326 91 18
info@seelagastro.ch
www.seelagastro.ch
Züricherstrasse 15
8400 Winterthur.

# Aaran Ayurveda & Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# Online Tech Network

5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்

ECDL
Office
Windows 10



தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59

# கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதனால் நம்மையும் நாட்டையும் காப்பாற்றலாம்

## விசேட குழந்தை நல வைத்திய நிபுணர் டாக்டர் விஜி திருக்குமார்

(காரைதீவு நிருபர்)



கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதனால் , நமக்கு தொற்று ஏற்படுகின்ற போது 100% தடுக்காவிடிலும் 60%- 90% குறைக்கின்றது .அத்துடன் தொற்றின் வீரியத்தை அல்லது பாதிப்பை குறைத்துக் கொள்ள உதவுகிறது.சில வேளைகளில் தொற்று ஏற்பட்டாலும் அது வெளிக்காட்டுப்படாமல் கடந்து போகிறது. எனவே தடுப்பூசி ஏற்றப்படுவது அவசியமாகும்.

இவ்வாறு கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஸ்ட விரிவுரையாளரும், மட்.போதனா வைத்தியசாலையின் விசேட குழந்தை நல வைத்திய நிபுணருமான டாக்டர் விஜி திருக்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

உலக நாடுகள் அனைத்தும் இவ் கொரனா தொற்றுக்காரணமாக பாரிய விளைவுகளை எதி்ர்நோக்கியுள்ளன. அவற்றை எதிர்கொள்வதற்காக ஒவ்வொரு நாடுகளும் தங்களுக்குரிய சாத்தியமான வழிமுறைகளில் கையான்டு வருவதுடன் அவற்றை தடுப்பதற்கான ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டுள்ளன.

நம்மில் சிலருக்குள்ள பயம் அல்லது சந்தேகம் இவ் தடுப்பூசியினால் ஏதாவது பாரிய பக்க விளைவுகள் ஏற்படுமோ என்பதாகும்.இது தேவையில்லாத ஒரு சந்தேகமாகும்.நாம் எடுக்கும் மருந்து மாத்திரைகளுக்கு எவ்வாறு சில விளைவுகள் இருக்கின்றதோ அதே போலவே இத் தடுப்பூசிகளை பொறுத்து சிலருக்கு காய்ச்சல் தலையிடி உடல் வலி ,மிக மிக குறைவானவர்களுக்கு அலர்ஜி போன்றவை ஏற்படுகின்றன. இவற்றை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ளதேவையில்லை.

நம் எல்லோருக்கும் தெரியும் நாம் வளர்ச்சியடைந்து வரும் நாடு. அதனால் நமக்கு நட்பு நாடுகளின் உதவியுடன் இவ் தடுப்பூசிகளை பெற்று முன்னுரிமை அடிப்படையில் ஆரம்பத்தில் சுகாதார துறையினருக்கும் பிறகு மக்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் பின்பு 30-60 வயது உள்ளவர்களுக்கும் அடுத்த கட்டமாக 18 வயதுக்கு மேற்பட்டோருக்கும் வழங்கப்படுகின்றது.இதன் அடுத்த கட்டமாக 12-18 வயதுள்ளவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமக்கு கிடைத்த இலவச கல்வி ,இலவச சுகாதாரம் அவற்றின் ஒரு பகுதியாக எமக்கு பெறுமதியான தடுப்பூசிகளை எமது அரசாங்கம் இலவசமாக வழங்கிக்கொண்டிருக்கிறது. அவற்றை சிறந்த முறையில் நாம் எல்லோரும் எடுத்துக் கொள்வதானால் இவ் கொடிய கொரனா தொற்றிலிருந்து மீண்டு வராலாம்.

# 5 நாட்கள் திட்டம்;3 நாட்களில் தீர்ந்துவிட்ட தடுப்பூசிகள்

(வி.ரி.சகாதேவராஜா)



காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நேற்று (1) புதன்கிழமை மூன்றாவது நாளாக தடுப்பூசி வழங்கும் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் நடைபெற்றது.

ஐந்து தினங்களுக்கு இத்தடுப்பூசியை ஏற்ற நேரஅட்டவணை தயாரித்து பகிரங்கபடுத்தி திட்டங்கள் இருந்தபோதிலும் மக்கள் காட்டிய ஆர்வத்தால் 3நாட்களுள் அவை தீர்ந்துவிட்டன.

நேற்று (1) புதன்கிழமை இறுதிகட்ட ஊசிகள் வழங்கப்பட்டன.இதுவரை மொத்தமாக 5000 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் வழிகாட்டலில் அலுவலக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்ஸீமா வசீர் தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பொது சுகாதார பரிசோதகர்கள்இ குடும்ப நல உத்தியோகத்தர்கள்இ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்நுளம்பு களதடுப்பு பிரிவினர்இதில் நிந்தவூர் பிரதேச இளைஞர் தன்னார்வ அணியினர்இபாதுகாப்பு படையினர் இணைந்து கொவிட்-19 தடுப்பூசி இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

# கட்டிட நிர்மாணப் பொருள் வியாபாரத்தில் மாபியா: நிர்ணய விலையை விட அதிகரித்து விற்கப்பட்டால் சட்ட நடவடிக்கை

## கல்முனை மாநகர சபை எச்சரிக்கை

(அஸ்லம் எஸ்.மௌலானா)



கல்முனை மாநகர சபை எல்லையினுள் கட்டிட நிர்மாணப் பொருட்கள் அனைத்தும், நிர்ணய விலையிலேயே விற்கப்பட வேண்டும் எனவும் மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாநகர சபை அறிவித்துள்ளது.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தலைமையில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்ற மாநகர சபையின் பொறியியல், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான பரிசோதகர்களுடனான விசேட கலந்துரையாடலின்போது இவ்விடயம் குறித்து கூடிய அவதானம் செலுத்தப்பட்டு, மக்களுக்கு நிர்ணய விலையில் கட்டிட நிர்மாணப் பொருட்கள் கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

இவ்விடயம் குறித்து மாநகர முதல்வர் தெரிவிக்கையில்;

கொரோனா பெருந்தொற்று அசாதார சூழ்நிலை காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கட்டிட நிர்மாணப் பொருட்களுக்கு என்றுமில்லாதவாறு திடீரென கடுமையான விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது பற்றி ஆராய்ந்தபோது, இந்த விலையேற்றமானது அரசாங்கத்தின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறித்த பொருட்களை விநியோகிக்கும் தரகர்களே தன்னிச்சையாக விலையேற்றம் செய்து, கொள்ளை இலாபம் ஈட்டுகின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது. இது ஒரு மாபியாவாகும்.

இந்நிலையில், அம்பாறை மாவட்ட கச்சேரியின் கட்டிட நிர்மாணப் பொருட்களுக்கான விலை நிர்ணயக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற நிர்ணய விலைக்கே கல்முனை மாநகரசபை எல்லையினுள் செங்கல், முண்டுக்கல், முக்கால் இஞ்சிக்கல், கட்டு மண், பூச்சு மண், அத்திவாரம் நிரப்பும் மண், கிறவல் போன்றவை விற்பனை செய்யப்பட வேண்டும் என கல்முனை மாநகர சபையினால் கண்டிப்பான உத்தரவு விடுக்கப்படுகிறது.

அவ்வாறே சீமெந்து மற்றும் கம்பி போன்றவை உரிய கம்பனிகளால் குறிக்கப்பட்ட நிர்ணய விலைகளுக்கே விற்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

அதேவேளை, இப்பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் கட்டாயம் பற்றுச்சீட்டு வழங்க வேண்டும். நுகர்வோர் கட்டாயம் இப்பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொண்டே, குறித்த பொருட்களை பொறுப்பேற்றுச் செல்ல வேண்டும். பற்றுச்சீட்டு இல்லாமல் வாகனங்களில் கொண்டு செல்லப்படும் பொருட்கள், மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்படும்.

மேலும், கட்டிட நிர்மாணப் பொருட்களை விநியோகிக்கும் தரகர்களும் வாகனங்களும் கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டு, அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் உரிய வாகனங்கள் கல்முனை மாநகர சபை எல்லையினுள் உட்பிரவேசிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாநகர சபையின் உரிய கள உத்தியோகத்தர்களின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பதிவு செய்யப்படாத வாகனங்களில் கொண்டு வரப்படும் பொருட்கள் கைப்பற்றப்பட்டு, சம்மந்தப்பட்டோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே பதிவு செய்யபடாத தரகர்கள் யாராவது கல்முனை மாநகர சபை எல்லையினுள் வியாபாரத்தில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநகர சபையின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களினால் இவ்வாகனங்களின் கொள்ளளவு அளவீடு செய்யப்பட்டு, குறித்த வாகனங்களில் காட்சிப்படுத்தப்படும். இக்கொள்ளளவுக்கு ஏற்பவே கல், மணல், கிறவல் போன்றவற்றின் விலைகளும் நிர்ணயிக்கப்படும்.

கட்டிட நிர்மாணப் பொருட்கள் எதுவாயினும் அவற்றை பதுக்கி வைப்பதும் நிர்ணய விலைக்கு மேலதிகமாக விற்பனை செய்வதும் கண்டறியப்பட்டால், நுகர்வோர் அதிகார சபையும் மாநகர சபையும் இணைந்து பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் சம்மந்தப்பட்டோரைக் கைது செய்து, சட்ட நடவடிக்கைக்குட்படுத்தி, அதிகபட்ச தண்டப்பணம் விதிக்கப்படும்- என்று குறிப்பிட்டார்.

# மாத்தளை மாநகராட்சி வீடு வீடாக தடுப்பூசி ஏற்றல்

(வி.ரி.சகாதேவராஜா)

மாத்தளை மாநகரசபையின் ஏற்பாட்டில் மாநகர சபையின் சுகாதாரப்பிரிவினரால் மாநகரிலுள்ள வீடுகளில் வர முடியாதவர்களுக்கு நேற்று தடுப்பூசி ஏற்றப்பட்டது.

மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் தலைமையில் மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர். அனுஷ வெலகெதர தலைமையிலான குழுவினர் இச்சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அத்தருணம் மாத்தளை மாநகரசபை முதல்வர் மேயர் சந்தனம் பிரகாஷ் உறுப்பினர் த.மோகன் கல்முனை மாநகரசபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் உள்ளிட்டோரும் தொடர்ந்து அத்தனைவீடுகளுக்கும் சென்று இச் செயற்றிட்டத்தை ஊக்குவித்தனர்.

60 வயதுக்கு மேற்ப்பட்டவர்களுக்கும் எழுந்து செயல் பட முடியாத நபர்களுக்கும் தடுப்பூசி வழங்கப் பட்டது.



# போராட்டம் ஓய்வடையாது:இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(நூருள் ஹுதா உமர்)

ஆசிரியர், அதிபர்களின் போராட்டங்களின் நியாயப்பாடுகளை முழுமையாக விளங்கிக் கொண்டும் அரசு இழுத்தடிப்புச் செய்வதை நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சுபோதினி அறிக்கையினை நடைமுறைப்படுத்துவதாக அறிவிக்கும் வரை நமது போராட்டம் ஓய்வடையாது என இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள விஷேட அறிக்கையில் தெரிவித்துள்ளது

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் அமைச்சரவை இணைக்குழு வெளியிட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள விஷேட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம். மூஸா செயலாளர் எம்.கே.எம். நியார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதிபர், ஆசிரியர் சேவையை வரைவிடப்பட்ட சேவையாக அமைச்சரவை அறிவித்துள்ளமைக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். எனினும் கூட்டிணைந்த தொழிற்சங்கங்கள் கடந்த இரு மாதங்களாக மேற்கொண்டு வரும் போராட்டத்திற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமென்றே நாம் எதிர்பார்த்தோம்.

5000 ரூபா இடைக்காலக் கொடுப்பனவோ அமைச்சரவை தீர்மானித்த சம்பளத் தொகையை நான்கு கட்டங்களாக வழங்குவதோ எமது போராட்டங்களுக்குத் தீர்வாகாது. யானைப் பசிக்கு சோளப் பொரிபோல் கண் துடைப்பு வேலையொன்றையே அமைச்சரவை உப குழு அறிவித்துள்ளது. இதனை தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாம் வன்மையாக நிராகரிக்கின்றோம்.

2018 ஆம் ஆண்டு கல்வியமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட சம்பள அறிக்கையில் உள்ள விடயங்களே அமைச்சரவை உப குழுவும் அறிவித்துள்ளது. இவ்வாறான அறிவிப்புக்கு சம்பள முரண்பாடு தீர்க்கும் முன்னெடுப்பு என்ற மாயை தேவையில்லை. சுபோதினி சம்பள முரண்பாட்டு அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களே தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் எனத் தெரிந்திருந்தும் அதன் நியாயப்பாடுகளை விளங்கியும் கண்மூடித்தனமான அறிவிப்பொன்றை அமைச்சரவை உப குழு விடுத்திருப்பதனை ஏமாற்று வேலையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

மாணவர் சமூகத்திற்கான ஆசிரியர் தேவைப்பாடுகள் உள்ள தீர்க்கமான கால கட்டத்தில் இருந்தும் மாணவர் சமூகத்தின் மீது கவலையற்ற நிலையில் தொடர்ந்தும் அமைச்சரவை உப குழு தீர்மானத்திற்கு வந்திருப்பது குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அமைச்சரவை உப குழுவின் அறிக்கையினை பிரபல்யப்படுத்தி எமது போராட்டங்கள் நிறைவடைந்து விட்டதான மாயை ஒன்றை ஆசிரியர்கள் மத்தியில் ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருகின்னர். இவ்வாறான விடங்கள் மீது ஆசிரியர் சமூகம் விளிப்பாக இருக்க வேண்டும். எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டங்கள் தொடரும். கூட்டிணைந்த தொழிற்சங்கங்களின் உத்தியோக பூர்வ அறிவிப்புவரும் வரை தொடர்ந்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அனைவரினதும் கடப்பாடாகும்.

தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆசிரியர் சமூகத்தின் விடிவுக்காக இரவு, பகல் பாராது செயற்படுவதை ஆசிரியர்களாகிய நாம் உணர வேண்டும். இது தனிப்பட்ட பிரச்சினையல்ல. கூட்டிணைந்த முன்னெடுப்பு. இவையெல்லாம் நமக்காகவே.

# மட்டு.வாவியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்கள் பிடிப்பு

(இ.சுதாகரன்)

மட்டு வாவியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்கள் பிடிக்கப்படுவதாகவும் அவற்றினை கட்டுப்படுத்துவதற்கு மீன்பிடி துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மீன்பிடித் தொழிலினை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொள்ளும் மீனவர்கள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

மட்டு மாவட்டத்திலுள்ள நன்னீர் மீன்பிடியில் தடை செய்யப்பட்ட இழுவை வலை, நாய் வலை,தன்கூஸ் வலை ,சுருக்கு வலை போன்ற தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகள் பயன்படுத்தப்படுவதனால் சிறிய வகை மீன் இனங்களின் உற்பத்தி குறைவடைந்து செல்லும் நிலைமை உருவாகியுள்ளது.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனால் மீன்பிடித் தொழிலினை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொள்ளும் பல குடும்பங்களின் பொருளாதார நிலைமை கேள்விக் குறியாகியுள்ளது.

மீனவர்களின் பொருளாதார நலன் கருதி தடைசெய்பப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீனவர்கள் கோரிக்கையினை முன்வைக்கின்றனர்.

# மகளிர் இல்ல மாணவிகளுக்கான ஒரு தொகை ஆடைகள் வழங்கி வைப்பு

(வி.சுகிர்தகுமார் )

சுவிஸ் நாட்டின் சுக் மாநிலத்தில் உள்ள ஸ்ரீசுக் சித்தி விநாயகர் அறக்கட்டளையின் அனுசரணையில் அக்கரைப்பற்று கோளாவில் அம்மன் மகளிர் இல்ல மாணவிகளுக்கான ஒரு தொகை ஆடைகள் வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாரை மாவட்ட இந்துகலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டு ஆடைகளை வழங்கி வைத்தார்.

சுவிஸ் லுக்சன் மாநிலத்தை சேர்ந்த விக்கி விதுஸ் எனும் 8 வயதே நிரம்பிய மாணவன் ஒருவரின் பிறந்த தினத்தை முன்;னிட்டே இப்பொருட்கள் அவரது குடும்பத்தால் இங்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அம்மன் மகளிர் இல்ல பணிப்பாளர் வாமதேவன் மற்றும் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் ப.சிறிதரன் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்கள் மத்தியில் உரையாற்றி மேலதிக அரசாங்க அதிபர் கல்வி ஒன்றினால் மாத்திரமே நாம் பலவிடயங்களை சாதிக்க முடியும் எனவும் இங்கு வாழும் மாணவர்கள் முறையாக கல்வி பயின்று வாழ்க்கையில் பல சாதனைகள் படைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.





PHOTO DIGITAL INTERNATIONAL
077-6139227
075-2600333

# எமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை போராட்டம் தொடரும்

## இலங்கை ஆ.சே. சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜெயசிங்க



(எஸ்.அஷ்ரப்கான்)

எமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொழிற்சங்கப் போராட்டம் தொடரும் என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர், அதிபர் தொழிற்சங்க போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில் அரசாங்கத்தால் எமது முன்மொழிவு திட்டத்தினை கட்டம் கட்டமாக நிறைவேற்றுவதாகவும் அதற்கு இடைப்பட்ட காலத்திலே மாதம்தோறும் ஐந்தாயிரம் ரூபாய் வழங்குவதாகவும் தீர்மானித்து அறிக்கைகள் விடப்பட்டு வரும் நிலையில் அதனை ஏற்கப் போவதில்லை என்று கூறி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மஹிந்த ஜயசிங்ஹ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த நாட்டில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அரசாங்கத்திடம் மானியம் கேட்கவில்லை. எனவே மானியம் வேண்டாம். சுபோதினி குழு அறிக்கையை செயற்படுத்த வேண்டும்.

மதிப்பிற்குரிய மத குருமார்களே, ஆசிரியர்களே, நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் பிரகாரம் அதிபர் ஆசிரியருடைய சம்பள பிரச்சினைக்கு தீர்வை அவர்கள் வழங்கியதாக ஊடகங்கள் வாயிலாகவும் அதேபோன்று அமைச்சருடைய சில கருத்துக்களும் தற்போது ஊடகங்களிலே உலாவிக் கொண்டிருகின்றன. இந்த செய்திகள், விடயங்களைத் தான் இதுவரை நாங்களும் அறிந்து கொண்டு இருக்கின்றோம். அந்த கருத்தின் பிரகாரம் தீர்வை அவர்கள் வழங்கியதாக ஊடகங்கள் வாயிலாகவும் அதேபோன்று அமைச்சருடைய சில கருத்துக்களும் தற்போது ஊடகங்களிலே உலாவுகின்றன.

அந்த கருத்தின் பிரகாரம் 2018ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட அந்த யோசனையை அல்லது அந்த தீர்வை தற்போது அமைச்சரவை உப குழு கூடி அந்த அறிக்கையை தான் அவர்களும் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து இருந்தார்கள் அந்த தீர்மானத்தின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட யோசனையும் கூட, எமக்கு வழங்கப்படவில்லை. ஆனால் கட்டம் கட்டமாக அதனை நிறைவேற்றுவதாகவும் அதற்கு இடைப்பட்ட காலத்திலே மாதம்தோறும் ஐந்தாயிரம் ரூபாய் வழங்குவதாகவும் அவர்கள் தீர்மானித்து இருக்கிறார்கள்.

இந்த தீர்மானத்தை ஒருபோதும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஏனென்றால் கடந்த 24 வருடங்களாக நாங்கள் போராடிக் கொண்டிருப்பதே எமக்கான முழுமையான சம்பள உயர்வைப் பெற்றுக் கொள்வதற்காகவாகும். அந்த தீர்மானத்தின் பிரகாரம் எமக்கு சம்பள முரண்பாட்டை தீர்க்க வேண்டும் என்றுதான் நாங்கள் உறுதியாக போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே தற்போது வழங்கப்பட்டுள்ள கரட் துண்டுகள் போன்ற தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தற்பொழுது எமது போராட்டம் முடிந்து விட்டதா? போராட்டத்திற்கு தீர்வு கிடைத்து விட்டதா? என்று சிலர் கேட்கிறார்கள். நிச்சயமாக இல்லை. எமது முழுமையான தீர்வாக நாம் முன்வைத்த சுபோதினி அறிக்கையின் ஊடாக அந்த தீர்மானத்தினூடாக எமக்கு முழுமையான அந்த சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும். என்பதில் எமது தொழிற்சங்கங்கள் மிகவும் உறுதியாக இருக்கின்றது.

பல்வேறுபட்ட வடிவங்களில் போராடிக் கொண்டிருக்கின்றோம். எனவேதான் எமது போராட்டம் நிச்சயம் முடியவில்லை. எமது இலக்கை அடையும் வரை எமது போராட்டத்தை பல்வேறுபட்ட வடிவங்களில் நாங்கள் கொண்டு செல்வோம்.

எனவே பல்வேறுபட்ட ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சில நபர்கள் இந்தப் போராட்டத்தை குழப்புவதற்காக பல்வேறுபட்ட பொய்யான கருத்துகளை தற்போது தெரிவித்து வருகின்றார்கள்.

கடந்த காலங்களிலும் இவர்களுடைய செயல்பாடுகள் எமது போராட்டத்தை மழுங்கடித்து காட்டிக் கொடுப்பதாக அமைந்தமையை நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

சிலர் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு என்னிடம் கேட்கிறார்கள் வலயக் கல்விப் பணிமனை ஊடாக பல்வேறுபட்ட வேலைகளை எமக்கு வழங்குகின்றார்கள். இந்த வேலைகளை நாங்கள் செய்ய வேண்டுமா என்று, நிச்சயமாக நீங்கள் எவ்வித வேலைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம். நாங்கள் முழுமையாக தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு கொண்டிருக்கின்றோம். எமக்கு முடிவு கிடைக்கும் வரை அல்லது நாங்கள் உத்தியோகபூர்வமான ஒரு அறிவிப்பை வழங்கும் வரைநீங்கள் இந்த போராட்டத்தில் இணைந்து முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்ற கருத்தை நாங்கள் முன்வைக்கின்றோம். இன்றுடன் எமது போராட்டம் 50 நாட்களைத் தாண்டி தொடர்கின்றது. இந்த போராட்டம் நிச்சயம் வெற்றியில் முடியக்கூடிய ஒரு போராட்டம். நாம் இணைந்து செயல்படுவோம்.

இந்த போராட்டத்தின் வெற்றி உங்களின் ஒற்றுமையிலேயே தங்கியிருக்கின்றது. இதனை முன்கொண்டு செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். இந்தப் போராட்டம் வெற்றி அடையும் வரையில் எம்மோடு இணைந்திருங்கள். போலியான செய்திகள் போலியான தகவல்களை வைத்து குழம்ப வேண்டாம். முகநூல் வழியாக வருகின்ற போலி செய்திகளை வைத்து நம்பிக்கொண்டு எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் செயல்பாடுகளில் யாரும் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அதிபர் - ஆசிரியர்களுக்கு 5,000 ரூபா மாதாந்த கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதுடன் அதிபர் - ஆசிரியர்களுக்கான சம்பள பிரச்சினைக்கு அடுத்த பாதீட்டில் தீர்வு வழங்கப்படும் வரை 5,000 ரூபா மாதாந்த கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, ஆசிரியர், அதிபர்வேதனமுரண்பாட்டை தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு முன்வைத்த யோசனைக்கு நேற்று அமைச்சரவை அனுமதியும் வழங்கப்பட்டது.

# மஞ்சள் கன்றுகள் வழங்கி வைப்பு

(திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்)



திருகோணமலை- மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மஞ்சள் கன்றுகள் வழங்கும் நிகழ்வு பிரதேச சபை தவிசாளர் ஜகத் குமார் வேரகொடவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மொரவெவ பிரதேசத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் மஞ்சள் கன்றுகள் இருக்க வேண்டும் என்ற நோக்குடன் நேற்று முதல் கட்டமாக நொச்சிக்குளம் மற்றும் கம்பகொட்ட கிராம மக்களுக்கு மஞ்சள் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது மொரவெவ பிரதேச சபையின் சிரேஷ்ட உறுப்பினர் சித்ரவேல் சசிகுமார் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# அங்கருடன் அன்லின் ஒன்றை கட்டாயமாக வாங்க வேண்டும்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை நகரில் அங்கர் 400 கிராம் அல்லது ரத்தி 400 கிராம் பால்மா பக்கட் ஒன்றை வாங்க வேண்டுமென்றால் அதனுடன் ஒரு அன்லின் பால்மா பக்கட் ஒன்றை கொள்வனவு செய்ய வேண்டும் என்ற புதிய நடைமுறையை வர்த்தகர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தற்போது நாட்டில் பால்மாவிற்கு தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பால்மா தேவையுள்ள சிறுவர் முதல் அனைவரும் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர். தலவாக்கலை நகரில் ஒரு சில வர்த்தக நிலையங்கள் மாத்திரம் தற்போது திறந்துள்ளபோதிலும் வழமையான வாடிக்கையாளர்களுக்கு மட்டுமே பால்மா இவ்வாறான முறையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# வாழ்வாதாரத்தை இழந்தோருக்கு நிவாரணப் பொருட்கள்



(தலவாக்கலை பி.கேதீஸ்)

பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தால் வழங்கப்படும் 2000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு கிடைக்கப்பெறாத 5000 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவு பொருட்களை வழங்கும் நிவாரண திட்டத்தை இலங்கை தொழிலாளர காங்கிரஸ் ஆரம்பித்துள்ளது.

இலங்கை தொழிலாளர காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரனின் பங்குபற்றலுடன் இதற்கான வேலைத் திட்டம் இவ்வாரம் முதல் ஆரம்பமாகியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக அட்டன் நகரசபை பகுதிக்குட்பட்ட அலுத்கல பகுதிக்கு வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்; இளைஞரணி பொதுச்செயலாளர் அர்ஜுன் ஜெயராஜ், அமைச்சரின் பிரத்தியேக உதவியாளர் திரு தயாளன், நகர சபை உறுப்பினர் திரு ரத்னகுமார் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இளைஞரணி பிரதேச அமைப்பாளர் சத்யா ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# திருகோணமலையில் மக்கள் நடமாட்டம் அதிகரிப்பு

திருகோணமலை ரவ்பீக் பாயிஸ்



நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை நகரில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்

திருகோணமலையில் அரச மற்றும் தனியார் வங்கிகள் அரச நிறுவனங்கள் வழமைபோல் இயங்குவதுடன் நகரில் அனேகமான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு இருப்பதை எம்மால் அவதானிக்க முடிந்ததுடன் நகரில் மக்கள் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதை எம்மால் காணக்கூடியதாக இருந்தது

இவ்வாறு பொதுமக்களின் தேவையற்ற நடமாட்டத்தை கட்டுப்படுத்த திருகோணமலை தலைமையக பொலிஸார் மற்றும் உப்புவெளி பொலிஸார் இணைந்து வீதியில் விசேட சோதனை நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்

இவ் சோதனை நடவடிக்கையில் அனுமதிப் பத்திரங்களுடன் பயணிக்கும் பயணிகள் மற்றும் வாகனங்களுக்கு அனுமதிக்கப்பட்டதுடன் அத்தியாவசிய தேவை மற்றும் வைத்தியசாலை செல்லும் பயணிகளுக்கு மாத்திரம் பயணிக்க அனுமதியளிக்கப்பட்டதுடன் தேவையற்ற விதத்தில் பயணித்தவர்கள் எச்சரிக்கையுடன் வீடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவ படகு மோதியதில் படகு சேதம் இரு மீனவர்களை காணவில்லை

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில் எல்லை தாண்டிய இந்திய மீனவ படகு மோதியதில் படகு சேதமடைந்த நிலையில் இருவர் கரை சேர்ந்ததுள்ளனர். மற்றுமொரு படகும் இரு மீனவர்களை காணவில்லை என சமாசத் தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் நேற்றைய தினம் கடலிற்கு தொழிலிற்க்காக சென்ற படகை எல்லை தாண்டிய இந்திய மீன்பிடி படகு மோதியதில் ஒரு படகு பலத்த சேதமாகியுள்ளதாகவும் சேதமான ஒருபடகில் சென்ற இருவரும், சேதமடைந்த படகுடன் கரை திரும்பியுள்ளனர்.

மேலுமொரு படகு கடலில் மீன்பிடித்தொழிலுக்கு சென்ற நிலையில் அதில் சென்ற இரண்டு பேரையும் கடலில் காணவில்லை என்றும் தேடும் பணிகள் இடம் பெற்று வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராகவன் மற்றும் வளயா எனும் இருவருமே இதுவரை கரை திரும்பவில்லை என மீனவர் சங்க தகவல்கள் தெரிவிப்பதுடன் மீனவர்களால் தேடப்பட்டு இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் தற்போது கடற்படை தேடிவருகின்றனர்.

காணாமல்ப் போன மீனவர்களது வலைகள் மாத்திரம் கடலில் படுக்க விடபரபட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திண்ம கழிவு முகாமைத்துவ திட்டத்தினால் குப்பைகளை உண்ண வரும் யானைகள் குறைவடைந்தது



(பாறுக் ஷிஹான்)

அட்டாளைச்சேனை அஸ்ரப் நகரில் குப்பைகளை உண்ண வரும் யானைகள் குறைவடைந்து வருகின்றது.

கடந்த காலங்களில் இப்பகுதிகளில் குப்பைகளை உண்ணவரும் யானைகள் அருகில் உள்ள குடியிருப்பு மனைகளை தாக்கியதுடன் மக்களுக்கும் அச்சுறுத்தலாக இருந்து வந்தது.

இதனை தொடர்ந்து பல்வேறு தரப்பினரும் இணைந்து குறித்த யானைகளை கட்டுப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். தற்போது அட்டாளைச்சேனை பிரதேசசபை பிரிவிற்குள் உள்ளடங்குகின்ற அஸ்ரப் நகர் திண்மக்கழிவு கொட்டும் இடத்தில் இரு வேறு நிறுவனங்கள் திண்மக்கழிவுகளை பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்த தொடங்கியுள்ளன.

இதில் ஒரு நிறுவனம் இயற்கை பசளை தயாரிப்பதற்காக அங்கு பொருத்தப்பட்டுள்ள பாரிய இயந்திரத்தின் மூலம் உரத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மற்றைய தனியார் நிறுவனம் ஒன்று இயற்கை வாயு தயாரிப்பதன் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு ஏனைய திண்மக்கழிவுகளை கையாளுகின்றன.

இதனடிப்படையில் தற்போது நாவிதன்வெளி சம்மாந்துறை கல்முனை காரைதீவு அட்டாளைச்சேனை ஆலையடிவேம்பு நிந்தவூர் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக்கழிவுகளை தரம்பிரித்து பொதுமக்களிடம் இருந்து பெற்றுக்கொள்வதனால் அதில் உள்ள இயற்கை திண்மக் கழிவுகள் பெரும்பாலும் உரம் தயாரிப்பதற்காக உடனடியாகவே அஸ்ரப் நகர் திண்மக்கழிவு கொட்டும் இடத்தில் உள்ள பாரிய இயந்திரம் பொறுத்தப்பட்டுள்ள இடத்திற்கு எடுத்து செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகின்றது.

இதனால் அஸ்ரப் நகர் பள்ளக்காட்டுப் பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை உண்ணுவதற்காக தினந்தோறும் 80க்கும் மேற்பட்ட யானைகள் வருகை தந்திருந்த நிலையில் தற்போது 6 முதல் 8 யானைகளே தினமும் வருகைதருவதாக அங்கு பணியாற்றுகின்ற பணியாளர் தெரிவித்தார். இது தவிர அருகில் உள்ள பொதுமக்களின் உடமைகளுக்கு சேதம் விளைவிக்கின்ற யானைகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றிருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

தினமும் மேற்குறிய உள்ளூராட்சி மன்ற பிரதேசங்களில் இருந்து இப்பகுதிக்கு குப்பைகள் மாநகர மற்றும் பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்ற நிலையில் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகை தந்திருந்தன.

தற்போது இந்த யானைகளை கட்டுப்படுத்த யானை வேலிகள் அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தவிர மேலும் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான பல பொறிமுறைத் திட்டங்கள் பள்ளக்காட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அம்பாறை பிராந்தியத்தில் அன்றாடம் சேகரிக்கப்படும் திண்மக்கழிவுகள் அநேகமானவை மேற்குறித்த இடத்திற்கே கொட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich | info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க, விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்
வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள் மற்றும் ஆவணங்களை துரித வேகத்தில் உரிய முகவரியில் கொண்டு சேர்க்க இன்றே நாடுங்கள்
TA parcel.lk LOCAL & INTERNATIONAL COURIER SERVICE
TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

| | |
|---|---|
| துரித வேகம். | London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service |
| உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. | All Countries |
| பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. | 100% Insured |
| 365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. | 365 Days 24 Hours Service |
| உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். | Door to Door Delivery |
| இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. | Online Tracking System |
| சிறந்த பொதியாக்கம். | Quality Packing |

நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.
இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.
எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.
அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.
வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +94774385151, +94752542651

Call us now!
0791023193
0787437071
MON-FRI 11.30 - 23.30
SATURDAY 11.30 - 23.00
SUNDAY 11.30 - 18.00
GRUNAU 1
ASIAN FOOD RESTAURANT
STARTER BBQ GRILL-TANDOORI SPECIAL NAAN MIX SABJI
BIRIYANI SPL CURRY DISHES FISH SPL DESERTS - ICE CREAM COFFEE SPL
CALL WE DELIVER YOU - STAY HOME STAY SAFE
MEIERWISSENSTR 588064 ZURICH

# கிளினிக் நோயாளர்களுக்கான மருந்துகள் அனுப்பல் அவசியம் எனின் வைத்தியரை சந்திக்கலாம்

(வாஸ் கூஞ்ஞ)

கடந்த மாதம் மன்னாரில் கொவிட் தொற்றாளர்களும் அத்துடன் இறப்பாளர்களும் அதிகரித்து காணப்படுவதால் மக்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது அவசியம். மன்னார் பொது வைத்தியசாலையில் வழமையான கிளினிக் இடம்பெறுகின்றபோதும் வைத்தியரைஅவசியம் சந்திக்க வேண்டும் என்றால் வருகை தாருங்கள் இல்லையேல் உங்களுக்கான மருந்துகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றது என மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி சென்தூர்பதிராஜட இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி சென்துபத்ராஜட தெரிவிக்கையில்

மன்னார் மாவட்ட பொது வைத்திசாலையில் வழமைக்கு மாறாக கடந்த ஆவணி மாதம் (08.2021) கொரோனா தொற்றாளர்களாக அதிகமான பேர் கண்டு பிடிக்கப்பட்டுளனர்.

இவ் வைத்தியசாலைக்கு காய்ச்சல், தடுமல். சளி என வருவோருக்கு உடன் பி.சீ.ஆர் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவர்களில் வைத்திசாலையில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு இங்கு வைத்து சிகிச்சை



அளிக்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறு தேவையில்லையெனின் வீடுகளில் கவனத்துடன் இருந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கடந்த மாதம் மட்டும் இவ் வைத்தியசாலையில் 180; தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இதே மாதம் இவ் வைத்தியசாலையில் அவ் தொற்றாளர்களின் இறப்புக்களும் அதிகரித்து காணப்பட்டுள்ளன.

அதாவது மன்னார் மாவட்டத்தில் இதுவரை மொத்தமாக 19 இறப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றபோதும் ஆவணி மாதம் மட்டும் எட்டு இறப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

தற்பொழுது மன்னார் பொது வைத்தியசாலையில் முப்பது கொரோனா தொற்றாளர்கள் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

ஆகவே இவ்வாறான நிலை தொடராதிருக்க மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்

குறிப்பாக எற்கனவே மக்களுக்கு தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வரும் சுகாதார நடைமுறைகளை மிகவும் இறுக்கமாக கடைப்பிடித்து வரும்படியும் மக்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளாது தேவையற்ற முறையில் வெளியில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ளும்படி வலியுறுத்துகின்றோம்.

தற்பொழுது மன்னார் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்கள் தொகை சற்று குறைந்திருக்கின்றபோதும் இங்கு வருவோரில் நாளாந்தம் ஓரிருவர் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டு வருகின்றனர். இவ் வைத்தியசாலைக்கு கிளினிக் சம்பந்தமாக வந்து செல்வோர் வழமைபோன்று தங்கள் கிளினிக்கை முன்னெடுத்துச் செல்ல முடியும். அவ்வாறு வர முடியாதவர்களுக்கு தபால் மூலம் அவர்களுக்கான மருந்து வகைகளை அனுப்பிவைக்கப்பட்டும் வருகின்றது.

இன்றைய சூழலில் கிளினிக் சம்பந்தமாக வருவோர் வைத்தியசாலைக்கு வருவதை தவிர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது.

இருந்தும் அவசியம் வைத்தியரை சந்திக்கத்தான் வேண்டும் என்றால் அவர்கள் சுகாதார நடைமுறைகளை கவனத்தில் எடுத்து வருவதில் தடையில்லை. என இவ்வாறு தெரிவித்தார்.

# மின் தகன நிலைய இயந்திரத்துக்கு மன்னார் நகர சபை 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் மின் தகன நிலையம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து மன்னார் நகர சபையானது மின் தகன நிலையத்துக்கான இயந்திரம் கொள்முதல் செய்வதற்காக ஐம்பது இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதாக இதற்காக இடம்பெற்ற விஷேட கூட்டத்தில் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களாக இருந்து மரணிக்கின்றவர்களை தகனம் செய்வதற்கு வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை கவனத்துக் எடுத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் செவ்வாய் கிழமை விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இவ் கலந்துரையாடலில் மன்னார் நகர சபைக்குட்பட்ட மன்னார் பொது மயானத்தில் உடனடியாக மின் தகன நிலையம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற அவசியம் உணர்த்தப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் இதற்கான நிதி உதவிகளை உள்ளுராட்சி சபைகள், பாராளுமன்னற உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோரிடம் கோருவது எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே புதன் கிழமை (01.09.2021) மன்னார் நகர சபை இதன் தலைவர் தலைமையில் இது தொடர்பான விஷேட கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இவ் விஷேட கூட்டத்தில் 16 உறுப்பினர்களில் 12 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இவ் கூட்டத்தில் மேற்கூறிய விடயமாக ஆராயப்பட்டதைத் தொடர்ந்து மன்னார்அரசாங்க அதிபரால் முன்னெடுக்கப்படும் மின் தகன நிலையம் அமைக்கும் இவ் திட்டத்துக்கு இவ் நிலையத்துக்கான இயந்திரத்துக்காக மன்னார் நகர சபை 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்வதாக தீர்;மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொது அஞ்சலி மண்டபம் தகனம் எரியூட்டப்பட்ட இடத்திற்கு அருகாமையில் கிரியைகளை செய்வதற்கு தேவையான மண்டபமும் மற்றும் மலசலகூட வசதிகள் செய்வதற்கடன நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் உம் கட்டம் தடுப்பூசி ஏற்றல்

(எம்.ஐ.எம்.றியாஸ்)

இலங்கை, ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், அதிகாரிகள், கல்வி சார் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கு கொவிட் 19 சைனோபாம் 2ம் கட்டம் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் நேற்று இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாக கேட்போர் கூடடத்தில் இடம் பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் வழிநடத்தலின் கீழ் சுமார் 800 பேருக்கு சைனோபாம் தடுப்பூசிகள் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரதிப் பதிவாளர் பீ.எம்.முபீன் தலைமையில் நடைபெற்ற தடுப்பூசி ஏற்றும் நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூவக்கர், பதிவாளர் எச்.அப்துல் சத்தார் கலந்து கொண்டனர்.

இதன் போது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், அதிகாரிகள், கல்வி சார் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கு கொவிட் 19 சைனோபாம் 2ம் கட்டம் தடுப்பூசி ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட காலத்தில் அனைவரும் தவறவிடாது நேரகாலத்தோடு முன்வந்து தத்தமது வதிவிடத்திற்கு அருகிலுள்ள கொவிட் 19 சைனோபாம் தடுப்பூசிகள் ஏற்றும் மையங்களுக்குச் சென்று தமக்குரிய 2ம் கட்டம் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் இதன் போது கேட்டுக் கொண்டார்.

# கந்தளாய் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் 35 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு



(எப்.முபாரக் )

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கந்தளாய் சிங்கள மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவுள்ளன.

சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் இவ் விளையாட்டு மைதானம் புனரமைப்பு பணிகள் நடைபெறவுள்ளன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து வலயக்கல்வி அலுவலகங்களிலுள்ள ஐந்து விளையாட்டு மைதானங்கள் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

கந்தளாய் மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் பணிகளை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரலவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர், கந்தளாய் வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் விளையாட்டுப் பணிப்பாளர் உட்பட பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# ஒலுவில் பிரதேசத்தில் சமுர்த்தி திணைக்களத்தின் நிதி மூலம் சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்பு வேலைத்திட்டம்



(எம்.ஏ.றமீஸ்)

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கச் செய்து விவசாயச் செய்கையாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் மக்கள் நல செயற் திட்டங்கள் தற்போது நாடு முழுவதிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைவாக, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒலுவில் பிரதேசத்தில் சேதனப் பயளை உற்பத்தி ஊக்குவிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

ஒலுவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி உதவி பெற்று வரும் குடும்பங்களுக்கு இவ்வாறு சேதனப் பசளை தயாரிப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வேலைத் திட்டம் ஒலுவில் பிரதேசத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அட்டாளைச்சேனை சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லா தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வின்போது விவசாய போதனாசிரியர்களான ஆர்.விஜயராகவன், ஜே.எம்.பாசில், விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான ஏ.தாஹிறா தஸ்னீம், வி.நிருஷன், விவசாய பாடவிதான உத்தியோகத்தர் எம்.வை.எம்.நியாஸ், சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் ஏ.எல்.பாறுக் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பங்குபற்றியிருந்தனர்.

இரசாயன உர வகைகள், கிருமி நாசினி போன்றவற்றைப் பயன்படுத்தி பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப் படுகின்றபோது பல்வேறான பக்க விளைவுகள் ஏற்படுவதோடு மக்களுக்கு பாரிய செவீனங்களும் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் இப் பயிர்ச் செய்கைகளுக்காக சேதனப் பசளையினைப் பயன்படுத்துவதால் நோயற்ற வளமான எதிர்கால சந்ததியினை உருவாக்க முடிவதோடு, நிறைவான வருமானத்தினையும் பூரண பயன்பாட்டினையும் பெற்றுக் கொள்ள முடியும் என இந்நிகழ்வின்போது கலந்து கொண்ட துறைசார் முக்கியஸ்தர்கள் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

இதேவேளை, ஒலுவில் பிரதேச விவசாயிகள், ஜனாதிபதியின் இயற்கை உரத்தினைப் பயன்படுத்தி இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும்; இவ் வேலைத்திட்டத்தின் மூலம் பல்வேறு நன்மைகள் உள்ளதாகவும் இந்நடைமுறை மூலம் தாம் தற்போது பயிர்ச்செய்கையினை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

